செ.வெ.எண்:27 நாள்:11.09.2021

# மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் குறித்த விழிப்புணர்வு மினி மாராத்தான் ஒட்டத்தை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறையின் சார்பில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் குறித்த விழிப்புணர்வு மினி மாராத்தான் ஒட்டத்தை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் இன்று (11.09.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு.கு.சின்னப்பா** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அரியலூர் மாவட்டத்தில் 400 இடங்களில் 40,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் வண்ணம் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாம் நடத்துதல், வீடுவீடாக சென்று கணக்கெடுப்பு பணிகள் மூலம் ஊக்குவிப்பு செய்தல், ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்தல், கொரோனா வைரஸ் பற்றியும் தடுப்பூசி நன்மைகள் பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்குதல் போன்றவைகள் மூலம் ஊக்குவிப்பு செய்தல் முகாம் சிறப்பாக நடைபெற அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் சுய உதவி குழுக்கள், சமூக ஆர்வலர்கள், செஞ்சிலுவை சங்கங்கள் போன்ற இதர தன்னனார்வலர்கள் மூலம் ஊக்குவிப்பு செய்து அதிக அளவில் தடுப்பூசி செலுத்த தேவையான முன்னேற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து இன்று (11.09.2021) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து நாளை நடைபெறவுள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மினி மாரத்தான் ஓட்டத்தினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் துவக்கி வைத்தார்.

இம்மாரத்தானது முக்கிய வீதிகள் வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மாவட்ட விளையாட்டு அரங்கில் முடிவுற்றது. இதில் பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் 100-க்குமேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

நாளை 12.09.2021 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற உள்ள மாபெரும் தடுப்பூசி முகாம் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்கி தங்கள் இருப்பிடம் அருகே நடைபெறும் முகாமில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் தங்களுடைய ஆதார் அட்டை (அ) இதர அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை கொண்டு வந்து தடுப்பூசி செலுத்திக்கொண்டு பயன்பெறுமாறு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**